# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 034/மா/2017

ஆணை எண். 68/2017

நாள் : 19/04/2017

திரு அ. சீனிவாசன்,
சேலம் – 636 005. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
சேலம் மாநகராட்சி
மற்றும் அரசு அதிகாரிகள் – எதிர்மனுதாரர்கள்

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம், எண்.467C/3 இராஜாஜி தெரு முகவரியில் வசிக்கும் திரு அ. சீனிவாசன் அவர்களது 11.02.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.02.2017 அன்று பெறப்பட்டு 34/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம், எண்.467C/3 இராஜாஜி தெரு முகவரியில் வசிக்கும் திரு அ. சீனிவாசன் அவர்கள் சேலம் மாநகராட்சி ஆணையர், நகராட்சி நிர்வாக ஆணையர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர், அரசு தலைமைச் செயலர் மற்றும் சேலம் மாநகராட்சிப் பொறியாளர்கள் ஆகியோருக்கு பல்வேறு நாட்களில் எழுதிய மனுக்களின் தொகுப்பினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி மேற்குறிப்பிட்ட அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து, 10.04.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அவ்விசாரணையின்போது, மனுதாரர் சேலம் மாநகராட்சியில் இளநிலை பொறியாளராகப் பணிபுரிந்து, 31.5.2008–ல் ஓய்வு பெற்றபின்பு, சேலம் சூரமங்கலத்தில் குடியிருந்து வருவதாகவும் தனது முறையீட்டு மனுவில் நகராட்சி நிர்வாக ஆணையர், தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாக துறையின் முதன்மைச் செயலாளர் மற்றும் மாநகராட்சி சம்பந்தப்பட்ட அலுவலர்கள்

ஆகியோரை எதிர் மனுதாரர்களாக சேர்த்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்ததாகவும், இதில் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை சார்பாக, தணிக்கை செய்த தணிக்கை அறிக்கைகள் மற்றும் தலைமை செயலாளர், அரசு முதன்மை செயலாளர் ஆகியோருக்கு எழுதிய கடிதத்தின் நகல்கள் ஆகியவற்றை இணைத்துள்ளதாகவும் தெரிவித்தார். உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் அதிகாரத்திற்கு உட்படாத அதிகாரிகள் மற்றும் அலுவலர்களை எதிர்மனுதாரர்களாக தனது முறையீட்டு மனுவில் சேர்க்கப்பட்டுவிட்டது என்றும், சட்டவிதிகளின்படி அதிகார வரம்பிற்குட்பட்ட அலுவலர்களை எதிர்மனுதாரர்களாக முறையீட்டு மனுவில் குறிப்பிட்டு மீண்டும் சமர்ப்பிப்பதாக விசாரணையின்போது தெரிவித்தார்.

3. இந்நேர்வின் முறையீட்டு மனுதாரர், அரசு உயர் அதிகாரிகள் மற்றும் பிற அலுவலர்களுக்கு சமர்ப்பித்த மனுக்கள் மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெற்ற விவரங்கள் அடங்கிய தொகுப்பினை மட்டுமே இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ளார். 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவுகளுக்குட்பட்டு இம்முறைமன்ற நடுவத்தால் நடவடிக்கை மேற்கொள்வதற்கான முறையீடு எதனையும் மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை. எனவே, குறைபாடான மனு என்ற அளவில் இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைத்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**2017**– ஆம் ஆண்டு, **ஏப்ரல்** திங்கள், **19**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

19.4.17

செயலாளர்.

19.4.17

பெறுநர்

1. திரு அ. சீனிவாசன்,
   467–சி/3, இராஜாஜி தெரு,
   கீர்த்தனா தியேட்டர் பின்புறம்,
   சூரமங்கலம்,
   சேலம் – 636 005.
2. ஆணையர்,
   சேலம் மாநகராட்சி,
   சேலம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்